# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 30.01.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கிழக்கு மாகாணத்திற்கு 13940 தடுப்பூசிகள்

## பிரதான வைத்தியசாலைகளில் முன்வரிசை கடமையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை

### திருமலை 2670, மட்டக்களப்பு 3400, கல்முனை 4870, அம்பாறை 3000



(வேதாந்தி)

கிழக்கு மாகாணத்தில் நான்கு சுகாதாரப்பிராந்தியங்களுக்கு13940 கொவிட் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்தடுப்பூசி மருந்துகள் இன்று முதல்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு மாவட்டத்தில் கன மழையால் மீண்டும் வெள்ளம்





(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மணி நேரமாக தொடர்ச்சியாக கன மழை பெய்து வருவதால் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தாழ்நிலப் பகுதிகள் உட்பட நகரப் பிரதேசங்களும்

02 ஆம் பக்கத்தில்...

## கடத்தப்பட்டு காணமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கோரி

### மட்டக்களப்பில் கண்டண ஆர்ப்பாட்டம்

( செங்கலடி நிருபர் சுபா)

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொடஅவர்களுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

ஊடகஅமைப்புக்கள் இணைந்து நடாத்திய இவ் ஆர்ப்பாட்டமானது நேற்றுமட்டக்களப்பு காந்திபூங்கா முன் காலை 10.30 மணியளவில்

02 ஆம் பக்கத்தில்...



## நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டங்கள் உடனடியாக நிறுத்தம்

### இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்





(ந.குகதர்சன்)

வாழைச்சேனை நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற எந்தவொரு செயற்றிட்டத்தினையும் அரசாங்கம் செயற்படுத்துவது இல்லை என்றும்

02 ஆம் பக்கத்தில்...

## பன்றிக்கு வைத்த மின்சாரம் தாக்கி இருவர் பலி

### மன்னாரில் சம்பவம்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள திருக்கேதீஸ்வரம் மாலிகத்திடல் என்னும் பகுதியில் இருவர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது மரணத்தை தழுவிக் கொண்ட இவ் இருவரும் காட்டுப் பன்றி பிடிப்பதற்காக சட்டபூர்வமற்ற முறையில் மின்சாரத்தை பாவித்துள்ளதாகவும் ஆனால் சம்பவம் அன்று பன்றி

02 ஆம் பக்கத்தில்...

## வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம்



(ரக்ஸனா)

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவாமாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன்

02 ஆம் பக்கத்தில்...

## மூதூர் பிரதேசத்தில் ஆதிக்குடிகளின் நீண்ட காலமாக நிலவும் காணி பிணக்கு தொடர்பான கலந்துரையாடல்



பொன்ஆனந்தம்

மூதூர் பிரதேசத்தில் உள்ள ஆதிக்குடிகளின் நீண்ட காலமாக நிலவும் காணி பிணக்கு தொடர்பான கலந்துரையாடல் நேற்று மூதூர் பிரதேச செயலாளர் எம். முபாரக் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் ஆதிக்குடிகளின் பிரதிநிதிகள், விவசாய சம்மேளனங்களி ன் பிரதிநிதிகள் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டு இவ்விடயம் தொடர்பாக விவாதித்தனர்

மூதூர்பிரதேசத்தின் உல்லைக் குளம் உள்ளிட்ட

02 ஆம் பக்கத்தில்...






## மட்டு ராமகிருஷ்ண மிஷன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா



தசாப்தங்கள் கடந்து ஆன்மீகப்பணி, கல்விப்பணி, சமுதாய மேம்பாட்டுப்பணிகளைச்செய்வதில் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷனின் வகிபங்கு மகத்தானது. சமகாலத்தில் மக்களிடையே புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினைகளுக்கு ஆன்மீகமும் பக்திமாரக்கமும் தான் சிறந்த உபாயங்களாகின்றன. மாறிவரும் உலகின் இக்கட்டான காலகட்டங்களிலெல்லாம் சமுதாயத்தின் தேவையறிந்து சேவைசெய்யும் உன்னத நிறுவகமாக ராமகிருஷ்ணமிஷன் தன்னை நிலைநிறுத்தி விட்டது.

அந்த வெளிப்பாட்டிற்கான செயற்படுத்தல் பாதையில் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அமையப்பெற்றுள்ள

02 ஆம் பக்கத்தில்...

## மொத்த மீன் சந்தை வரியைப் பெற நடவடிக்கைகள்

### திருகோணமலை நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம், பொன் ஆனந்தம்

மொத்த மீன் சந்தை வரியைப் பெற நகரசபை மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு மாத காலத்திற்குள் அமைச்சு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில் மீண்டும்

02 ஆம் பக்கத்தில்...

## புல்மோட்டை நூராணிய நகரில் கட்டுத் துவக்குடன் இளைஞர் ஒருவர் கைது

(கதிரவன்)

புல்மோட்டை நூராணிய நகரில் கட்டுத் துவக்குடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் வீட்டினை சோதனையிட்ட போதே

02 ஆம் பக்கத்தில்...




# சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தின் இணைப்பாளர்கள் நியமனம்



(அஸ்லம் எஸ். மௌலானா)

'சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியம்' எனும் அமைப்பின் செயற்பாடுகளை தேசிய ரீதியில் மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு மாவட்ட மற்றும் பிரதேச இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த அமைப்பின் பொதுத் தலைவராக அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருதைச் சேர்ந்த அறிவிப்பாளர் ஏ.றொஸான் முஹம்மட் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட இணைப்பாளர்களாக சௌந்தரராஜன் தனஞ்சயன் (மட்டக்களப்பு), நஹீப் நுஸ்ரி முஹம்மட் (திருகோணமலை), அப்துல் மஜீட் சாகீர் அஹமட் (அம்பாறை), முஸம்மில் பாத்திமா மின்ஹா (குருநாகல்), அஹமட் சப்ராஸ் (புத்தளம்), செல்வகுமார் ரினோஷான் (நுவெரேலியா) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச இணைப்பாளர்களாக அப்துல் ரஸாக் முஹம்மது ஜப்ரான் (சாய்ந்தமருது), வஹாப்தீன் நிஜாஸ் (ஒலுவில்), முஹம்மட் சாஜித் (நிந்தவூர்), தாஜுதீன் முஹம்மது நுஸ்கி (அட்டாளைச்சேனை), பஷீர் இர்ஹான் (பாலமுனை), அன்சூன் முஹம்மது தஸ்ரிக் (கிண்ணியா), சஹிபுதீன் பாத்திமா அப்ரா (நாகவில்லு), சொவான் தினுஷான் (பலாங்கொட) ஆகியோர் இதுவரை நியமிக்கப்பட்டுள்ளனர்.

சமூக சேவைக்கான நட்புறவு ஒன்றியத்தின் ஊடாக வசதி குறைந்த மாணவர்களுக்கான உதவிகள், ஊனமுற்றோருக்கான சமூக நலத் திட்டங்கள், இனங்களுக்கிடையில் நட்புறவை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள், சமூகப் பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு சேர்க்கும் வேலைத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு செயற்திட்டங்களை மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் வட்டமேசை கலந்துரையாடல்கள் மூலம் தேசிய அளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைப்பின் பொதுத் தலைவர் ஏ.றொஸான் முஹம்மட் தெரிவித்தார்,

# விசாலமான தையல் பயிற்சி நிலையம் தாழங்குடாவில் திறந்து வைப்பு





(ரக்ஸனா)

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மண்முனைப்பற்று பிரதேசத்திற்கான விசாலமான தையல் பயிற்சி நிலையம் வெள்ளிக்கிழமை(29) தாழங்குடாவில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாகராசா தனஞ்செயன் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கேசவமூர்த்தி மோகன், பிரேம்குமார் சிரேஷ்ட தையல்போதனாசிரியர் திருமதி நிவேதிதா ரவிச்சந்திரன், ஆகியோர் அதிதிகளாக பங்கேற்று நாடாவை வெட்டி புதிய கட்டடத்தினை திறப்பு விழா செய்து வைத்தனர்.

இந்நிகழ்வின் ஒழுங்கமைப்பினை மண்முனைப்பற்று பிரதேச பதில் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் துரையப்பா சசிகுமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுகிர்தலதா இன்பசாகரன் மற்றும் தாழங்குடா தையல் பயிற்சிநிலைய போதனாசிரியை திருமதி சந்திரிக்கா மகேந்திரராசா, தாழக்குடா 153 ஆம் பிரிவு, கிராமிய அபிவிருத்தி சங்கதலைவர் இராசமணி கலைநேசன் உள்ளிட்டோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக இடப்பரப்புடன் கொண்ட பயிற்சி நெறிகளை பூரணமாக மேற்கொள்வதற்குரிய சகல உட்கட்டமைப்பு அடிப்படை வசதிகளையும் கொண்டமைந்ததான பூரணத்துவம்பெற்ற கிராமிய பொருளாதார அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான தையல்பயிற்சி நிலையமாகவே இந்த தாழங்குடா தையல்பயிற்சி நிலையம் மிளிர்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புல்மோட்டை நூராணிய நகரில் கட்டுத் துவக்குடன்...

இத்துவக்கு கண்டு கொள்ளப்பட்டது.

இதனை ஒளித்து வைத்திருந்த 28 வயது இளைஞன் கைது செய்யப்பட்டு புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் கைது இடம் பெற்றுள்ளது.

# பன்றிக்கு வைத்த மின்சாரம் தாக்கி இருவர் பலி...

அகப்படாமையால் இவ் மின்சாரத்தை துண்டிப்பதில் ஈடுபட்டபோதே மின்சாரம் தாக்கி மரணித்திருக்கலாம் என ஆரம்ப விசாரனையில் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் இறந்தவர் பள்ளிவாசல்பிட்டி மூக்கையா மகேந்திரன் (வயது 45). வேட்டையான் முறிப்பு பகுதியைச் சார்ந்த அந்தோனிப்பிள்ளை தேவசங்கர் (வயது 35) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் பகுதியில் மழை பெய்து கொண்டிருந்ததுடன் இவ் சம்பவம் அதிகாலையில் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன் வெள்ளிக்கிழமை (29.01.2021) காலை பத்து மணிக்கு பின்பே இவ்ர்கள் தண்ணீருக்குள் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ் சம்பவம் மாந்தை மேற்கு மாலிகத்திடல் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக பொலிசார் விசாரனைகளை மேற்கொண்டு வருவதுடன் மன்னார் பதில் நீதவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ மரண விசாரனையை மேற்கொண்டுள்ளார்.

# மொத்த மீன் சந்தை வரியைப் பெற நடவடிக்கைகள் ...

அமைச்சருடன் கதைத்து எமக்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவையை பெற்றுக் கொள்ள நகராட்சிமன்றம் நடவடிக்கை எடுக்கும் என வரியிறுப்பாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

திருகோணமலை நகர மொத்த மீன் சந்தை வரிப்பணம் தொடர்பாக நகரசபை உறுப்பினர் சத்தியன் நேற்று (29) உண்ணாவிரதம் இருக்கின்ற விடயம் தொடர்பாக திருகோணமலை நகரசபை தலைவர் நா.இராஜநாயகம் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது. திருகோணமலை நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மொத்த மீன் வியாபார சந்தை 2012 ஆம் ஆண்டு 04ம் திகதி கடற்தொழில் அமைச்சினால் நகரசபை காணியில் கட்டப்பட்டது. இதன் போது நகராட்சிமன்றத்திற்கும் கடற்றொழில் அமைச்சிற்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவ்ஒப்பந்தத்தின் பிரகாரம் மொத்த மீன் சந்தையை கடற்றொழில் அமைச்சு வியாபாரிகளுக்கு வாடகைக்கு கொடுப்பதெனவும், அவ்வருமானத்தில் 30% நகராட்சிமன்றத்திற்கும், அங்கு சேரும் கழிவுகளை அகற்றுவதற்கும் அப்பகுதியை சுத்தம் செய்வதற்கும் செலுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இக்கொடுப்பனவுகள் 2014 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தத்தின் பிரகாரம் நகரசபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. பின்னர் 2014 ஆம் ஆண்டிலிருந்து நகரசபைக்கு அக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக நாம் திருகோணமலையில், அக்கட்டடத்தில் இயங்கிய கடற்றொழில் அமைச்சின் உப அலுவலக உத்தியோகத்தரிடம் கேட்டபோது நிலுவைகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக கூறி பல காலம் கடந்த நிலையில் இது தொடர்பாக கொழும்பிலுள்ள அமைச்சின் செயலாளரிடம் நேரடியாக கதைத்து எமது கடிதத்தினையும் 28.06.2019 அன்று கையில் ஒப்படைத்தேன். செயலாளருக்கு வழங்கிய கடிதத்திற்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. என 2020.11.11 ஆம் திகதி கடிதமொன்றை கடற்றொழில் அமைச்சருக்கும் அனுப்பியிருந்தேன்.

2021.01.09 .ஆம் திகதியன்று கச்சேரியில் நடைபெற்ற அமைச்சர்களுடனான கூட்டத்திற்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சரிடம் மேற்கூறிய விடயம் தொடர்பாக விளக்கம் கொடுத்ததுடன் நிலுவைகளை பெற்றுத்தருமாறும் கோரியிருந்தேன். அமைச்சரும் இதற்கான நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார். ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடில் மீண்டும் அமைச்சருடன் கதைத்து எமக்கு செலுத்த வேண்டியுள்ள நிலுவையை பெற்றுக்கொள்ள நகராட்சிமன்றம் நடவடிக்கை எடுக்கும் என வரியிறுப்பாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதுவரை மொத்த மீன்சந்தையில் கழிவகற்றலுக்காக சபையின் நிதியே செலவு செய்யப்படுகின்றது. எனவே நிலுவைகள் கிடைக்கப்பெறாதபட்சத்தில் நகரசபையால் வழங்கப்படும் சுத்திகரிப்பு சேவையை நிறுத்துவது தொடர்பாக சபையில் ஆராய்ந்து சபையின் அனுமதியையும் பெற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. என திருகோணமலை நகரசபை தலைவர் நா.இராஜநாயகம் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார் .

# மட்டு ராமகிருஷ்ண மிஷன் திருக்கோயில்...

ராமகிருஷ்ணமிஷன் திருக்கோயிலானது புதுப்பொலிவு பெற்று ஆன்மீக எழில் பொங்க மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவினைக் காணவிருக்கின்றது. தற்போதைய அசாதாரண சூழ்நிலையினை கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளிற்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களின் வரவோடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1ம் திகதி (திங்கட்கிழமை) சித்தயோகம் கூடிய சுபவேளையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் திருக்கோயிலிற்கான கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகள் கும்பாபிஷேகம் சிறப்பு யாகபூசை பஜனைப்பாடல்கள் விசேட ஆராதனை வழிபாடுகள் முதலியவற்றுடன் பக்தர் உள்ளங்களில் சங்கமிக்க இருக்கின்றன. நாட்டின் அசாதாரண சூழ்நிலை கருதி மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளமையினால் ஏனைய பக்தர்கள் நிகழ்நிலை ஊடகங்கள் மூலமாக கும்பாபிஷேகத்தைக்கண்டு ஆன்மீக அனுபூதியினைப் பெற்றுக்கொள்ளலாம். திருக்கோயிலைத் நேரடியாக தரிசிக்க விரும்பும் பக்தர்கள் பிறிதொருநாளில் குடும்ப சகிதம் வருகைதருமாறு அறுவுறுத்தப்படுகிறார்கள்.

அனைத்துநிகழ்வுகளும் இலங்கைராமகிருஷ்ணமிஷன் கிளையின் தலைவர் ஸ்ரீமத்சுவாமி அக்ஷராத்மானந்தஜீ மஹராஜ் அவர்களின் தலைமையில் இடம்பெறும்.

பகவான் ஸ்ரீராமகிருஷணரின் கோயில் திருப்பணிக்காக மகத்தான சேவைகள் செய்தபக்தர்கள், நிதி நன்கொடையாளர்கள், பலஊர்களில் நன்கொடை ஏற்பாடுகளைச் செய்தவர்கள் அனைவருக்கும் பிறிதொருநாளில் சுவாமிகளால் அழைப்புவிடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி...

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாளேந்திரன் தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் நாசிவன்தீவு கிராமத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டத்தை நிறுத்துமாறு பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் தமிழ்தேசியகூட்டமைப்பினர் மக்களுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக விசேட ஒன்று கூடல் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது கலந்து கொண்டு மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டமானது சுற்றால் அதிகார சபையின் அனுமதி பெறப்படாமல் உள்ளது, அத்தோடு கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினரின் கருத்தின் பிரகாரம் மண் கழுவும் பட்சத்தில் தண்ணீர் உவர் தன்மை ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளது.

நாசிவன்தீவு கிராம மக்கள் கடந்த காலங்களில் உவர் தன்மை இல்லாத நீரினை பருகி வந்த நிலையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தின் மூலம் கிணற்று தண்ணீர் உவர் தன்மையை அடைந்துள்ளது என்பது உண்மையான விடயம். ஆகவே நாசிவந்தீவு கிராமம் கடல் அரிப்புக்குள் உள்ளாக்கப்படும் நிலைமையில் காணப்படும்.

அத்தோடு கிராம அதிகாரியின் தனியார் காணியில் மணல் அகழ்வும் இடம்பெற்றுள்ளது. குறித்த மக்கள் குடிநீர் பிரச்சனையை எதிர்நோக்கி வரும் நிலையில் பல்வேறுபட்ட பிரச்சனைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற எந்தவொரு செயற்றிட்டத்தினையும் அரசாங்கம் செயற்படுத்துவது அல்ல. ஆகவே மக்களின் நலன்களைதான் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டமானது செயற்படுத்துவதற்கு சாத்தியமானதாக இல்லை. எனவே வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகத்தினுள் குறித்த வேலைத்திட்டம் கடந்த காலத்தில் ஏற்பட்ட போது எந்தவித பிரச்சனையும் ஏற்படவில்லை. குறித்த திட்டம் தொடர்பில் பிரதேச செயலாளர், உயர் அதிகாரிகள், மீனவர் மற்றும் பிரதேச மட்ட அமைப்புக்கள் ஆகியோரின் கருத்தின் பிரகாரம் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம் அல்லது மக்கள் பிரச்சனை ஏற்படுத்தாத இடத்தில் உரிய திணைக்களங்களின் அனுமதியை பெற்று வேறு இடத்தில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

எனவே நாசிவன்தீவு கிராமத்தில் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராட்சி திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், உரிய இடத்தினை தெரிவு செய்து மக்கள் மற்றும் அமைப்புக்களின், உரிய திணைக்களங்களின் அனுமதி பெற்ற பின்னர் வேலைத்திட்டத்தினை மேற்கொள்ள முடியும் என்றார்.

அத்தோடு குறித்த திட்டம் நிறுத்தப்பட்ட நிலையில் இதனை மீறி திட்டத்தினை நடைமுறைப்படுத்தினால் குறித்த நபர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் பொலிஸாருக்கு இதன்போது பணிப்புரை வழங்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் வாழைச்சேனை பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம், உதவி பிரதேச செயலாளர் திருமதி.நிருபா பிருந்தன், கரையோர பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர் எம்.துளசிதாசன், கடலோர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை உதவிப் பணிப்பாளர் எஸ்.தயாபரன், சுற்றாடல் அதிகாரி சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.கோகுலதாசன், வாழைச்சேனை மீன்பிடி துறைமுக முகாமையாளர் ஜோர்ஜ் றெஜினோல்ட் விஜிதரன், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன, கரையோர பேணல் திணைக்களத்தின் பிரதேச செயலக திட்டமிடல் உதவியலாளர் வி.ஏ.பைறூஸ், கிராம அதிகாரிகள், கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மூதூர் பிரதேசத்தில் ஆதிக்குடிகளின் நீண்ட...

பிரதேசங்களில் தமது காணிகளில் பலர் ஆடத்தாக பிடித்து செய்கை பண்ணிவருவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டு முன்வக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றைய தினம் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்தகுற்றச்சாட்டு தொடர்பான காணி களுக்கான ஆவணங்களை சேகரித்து பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என ஆதிக்குடிகளின் சங்க பிரதிநிதி வரதன் தெரிவித்தார்.

இருபிரிவினரும் ஆவணங்கள் சமர்பிக்கும் பட்சத்தில் ஆவணங்களின் உண்மைத்தன்மையை தொடர்பாகவும் ஆராயப்படும் என பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஆவணங்கள் சமர்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இதுபற்றி ஆராயப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# கடத்தப்பட்டு காணமல் ஆக்கப்பட்ட...

ஆரம்பமானது. உழைக்கும் ஊடக தொழிற்சங்க சம்மேளனம், கிழக்குமாகாண தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இவ் ஆர்ப்பாட்டத்தை நடாத்தியது.

இவ் ஆர்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளரகள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் , தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர், உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும், சர்வதேசமே பதில்சொல், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியராளர எங்கே?படுகொலைசெய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதியைப்பெற்றுக் கொடு போன்ற கோசங்களை எழுப்பினர்..

# வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில்...

கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றர் அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுவதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட நழலையப் பொறுப்பதிகாரி சு.ரமேஸ் வெள்ளிக்கிழமை (29) தெரிவித்துள்ளார். இவ்விடையம் தொடர்பில் அவர் மேலும் தெரவித்துள்ளதாவது

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை மாவட்டத்திலும் சில இடங்களில் %5 மில்லி மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுகின்றது.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப் படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். என அவர மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாணத்திற்கு 13940 தடுப்பூசிகள்...

பிரதான வைத்திய சாலைகளில் முன்வரிசை கடமையில் ஈடுபட்டுள்ள சுகாதார உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

திருகோணமலை 2670, மட்டக்களப்பு 3400, கல்முனை 4870, அம்பாறை 3000 என பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

கிழக்குமாகாணத்தில் மொத்தம்46 சுகாதார வைத்தியஅதிகாரிபிரிவுகளுக்கும் தேசிய வைத்தியசாலைகளுக்கும் குறிப்பிட்ட தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கட்டுள்ளன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் எட்டு கொவிட் தடுப்பு சிகிச்சை நிலையங்களில் பணிபுரிவோருக்கும் தடுப்பூசி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது..

இதேவேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு1110 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இன்று முதல் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாக வைத்தியசாலை உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# மட்டு மாவட்டத்தில் கன மழையால் மீண்டும் வெள்ளம்...

வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளிக்கிழமை(29) பகல் வரை மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையின் ஏறாவூர் நகரப் பகுதியை ஊடறுத்து வெள்ள நீர் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. இதனால் வாகனப் போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டது. சிறிய ரக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையிருந்தது.

அதேவேளை ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸாரும் நகர சபை ஊழியர்களும் பயணிக்கும் வாகனங்களைப் பாதுகாப்பாக அனுப்புவதில் ஈடுபட்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாழக்கிழமை நள்ளிரவிலிருந்து எட்டு மணித்தியாலமாக பெய்த கனமழையினால் இந்தப் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மழை மானி அளவு கருவி பொருத்தப்பட்டுள்ள மயிலம்பாவெளியில் 218 மில்லி மீட்டர் மழை வீழ்ச்சியும், மட்டக்களப்பு நகரத்தில் 118.1 மில்லி மீட்டர் மழை வீழ்ச்சியும், நவகிரியில் 8.1 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும், தும்பங்கேணியில் 52.% மில்லி மீட்டர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சையில் 23 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும், வாகனேரியில் 88.3 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும், கட்டுமுறிவில் 11 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 43 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும், கிரான் பகுதியில் 88.2 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும், பாசிக்குடாவில் 80 மில்லிமீட்டர் மழை வீழ்ச்சியும் கிடைக்கப்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கனமழை வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மீண்டும் கடும் மழையால் வாழைச்சேனையில் ஊருக்குள் புகுந்த வெள்ள நீர்





**(ந.குகதர்சன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பித்துள்ள மழையினால் கோறளைப்பற்று மத்தி மற்றும் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் சில வீதிகள் மற்றும் குடியிருப்புக்கள் என்பன நீரில் மூழ்கியுள்ளதாக பிரதேச செயலாளர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக வாழைச்சேனை, கோறளைப்பற்று மத்தி, ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் பெரும்பாலான தாழ் நில பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு காணப்படுவதுடன், சில இடங்களில் குடியிருப்புக்குள் நீர் புகுந்துள்ளமையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

அந்தவகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை, மாவடிச்சேனை, செம்மண்ணோடை, பிரதேசமும், வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் கறுவாக்கேணி, கிண்ணையடி, ஆஞ்சநேயர்புரம், கண்ணகிபுரம், ஆகிய பிரதேங்களில் வெள்ள நீர் காணப்படுவதுடன், இதுவரை எந்தவித இடம்பெயர்வுகளும் இடம்பெறவில்லை என்றும், தற்போது மழை தொடர்ச்சியாக பெய்யும் நிலைமை ஏற்படும் பட்சத்தில் இடம்பெயர்வுகள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக பிரதேச செயலாளர்கள் தெரிவித்தார்கள்.

குறித்த மழை காரணமாக வீதிகளில் ஏற்பட்ட வெள்ள காரணமாக போக்குவரத்துக்கள் செய்வதிலும் பாடசாலை மாணவர்கள் பயணம் செய்வதில் பாரிய இன்னல்களை அனுபவித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.







கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற தைப்பூசபூசை திருவிழாவின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.

# மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டம்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றி வரும் 14 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் உரிய சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களின் முன்னேற்ற மதிப்பாய்வு கூட்டம் நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.



இக் கூட்டத்தில் சென்ற ஆண்டிற்குரிய முன்னேற்ற அறிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகபிரிவுகளுக்கும் உரிய சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களினாலும் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பாக அரச அதிபரினால் விரிவாக ஆராயப்பட்டது. இம்முன்னேற்ற அறிக்கையினை கொண்டு எவ்வாறு எதிர்வரும் ஆண்டை சிறப்பாக நடத்துவது தொடர்பாக விசேடமாக கலந்துரையாடப்பட்டது. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அரச அதிபர் பாராட்டு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.









# திருகோணமலையில் மஜாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச்சார விடுதி

(எப்.முபாரக்)

திருகோணமலையில் மஜாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச்சார விடுதி நடாத்தி வந்த நான்கு பேரை அடுத்த மாதம் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க வியாழக்கிழமை உத்தரவிட்டார். கல்கமுவ,தம்புள்ளை,மற்றும் மாத்தளை பகுதியைச் சேர்ந்த 31,34,மற்றும் 36 வயதுடைய மூன்று பெண்களும் ஆண் ஒருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் திருகோணமலை மத்திய வீதிப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் எதிரே மஜாஜ் நிலையம் என்ற பெயரில் விபச்சார விடுதி நடாத்துவதாக திருகோணமலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த விடுதிக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பேசாலையில் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

(வாஸ் கூஞ்ஞ)

பேசாலை பகுதியில் ஒரு ஆலயத்தில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட நபர்களில் கொரோனா 19 தொற்று நோய் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன.

கடந்த சில தினங்களுக்கு முன் பேசாலை பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் இவ் வருடத்துக்கான திட்டமாநாடு இடம்பெற்றது

இவ் மாநாட்டில் 120 நபர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது இதில் கலந்து கொண்டவர்களில் ஒருவருக்கு கொரோனா 19 தொற்றுநோய் பீடித்திருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள் சுய தனிமையில் இருக்கும்படி அறிவிறுத்தப்பட்டிருந்தனர்

இந்த நிலையில் இது சம்பந்தமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இதில் தொடர்புடையோருக்கு மேலும் ஐந்து நபர்களுக்கு கொரோனா தொற்றுநோய் பீடிதுதிருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் ஆலய மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் வியாழக்கிழமை (28) பேசாலையில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்தது.

பேசாலையில் கொரோனா அச்சுறுத்தல் காணப்படுவதால் இப்பகுதியில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகத்தில்

# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகம் ஒரு முன் மாதிரியாக திகழ்கின்றது





களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கம் கணணிமயமாக்கப்பட்டு 27.01.2021 அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்ட போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடுபூராவும் சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கள் கணணிமயமாக்கப்பட்டு வருகின்றது அதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏழு சமுர்த்தி வங்கிகளும் ஒரு சமுதாய அடிப்படை அமைப்பு சங்கமும் கணணிமயமாக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 27.01.2021 களுவாஞ்சிக்குடி பிரதேச செயலளர் சிவப்பிரியாவில்வரெத்தினத்தின்தலைமையில் நடைபெற்ற சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்கமும் கல்லாறு சமுர்த்தி வங்கியும் கணணிமயமாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட நிகழ்வின் போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந் மேற்கண்டவாறு கூறினார். களுவாஞ்சிக்குடி பிரதேசசெயலகத்தில் இயங்கும் மூன்று சமுர்த்தி வங்கிகளும் அதனை மேற்பார்வை மேற்கொள்ளும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கமும் கணணிமயமாக்கப்பட்டு முதல் தடவையாக சகல பணிகளையும் பூர்த்தி செய்து ஒரு முண்ணுதார பிரதேச செயலகமாக திகழ்வதாக குறிப்பிட்டு பிரதேச செயலாளரையும் பாராட்டினார். மேலும் குறிப்பிடுகையில் கடந்த இரண்டு வருடங்களாக மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தில் பல முன்னேற்றங்களை தாம் காண்பதாகவும் சிறப்பான செயற்பாடுகளை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் தற்போது மேற் கொள்வதாகவும் பாராட்டியதுடன் இக்கொவிட் காலத்திலும் இப்பணிகைளை முடித்த சகலருக்கும் பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அமிர்தகலாதேவி பாக்கியராஜா அவர்கள் தனதுரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் தடவையாக ஒரு சமுர்த்தி வங்கிச்சங்கம் கணணிமயமாக்கப்பட்டு திறந்து வைப்பதில் தாம் மட்டற்றமகிழ்ச்சி அடையவதாகவும் இதே போல் மிகுதியாகவுள்ள 13 சமுர்த்தி வங்கிச்சங்கங்களும் தம்மை முன்னிலைப்படுத்தி கணணிமயமாக்கல் நடவடிக்கையில் ஈடுபடுமாறும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் கணக்காளர் எஸ்.எம். பஸீர் அவர்களும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் சிரேஸ்ட முகாமையாளர் ஜீ.பே.மணோகிதராஜ் அவர்களும், சமுர்த்தி வங்கி பிரிவின் முகாமையாளர் நிர்மலாதேவி கிரிதரன் மற்றும் சமுர்த்தி முயாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் கௌரவிக்கப்பட்டதுடன் நினைவு பரில்களும் வழங்கப்பட்டன.

# காத்தான்குடி மத்திய கல்லூரி ஆசிரியர்களின் முன் மாதிரியான செயற்பாடு

(ந.குகதர்சன்)



காத்தான்குடி மத்திய கல்லூரியில் கடமையாற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு நிவாரண பொருட்களை இன்று வழங்கி வைக்கப்பட்டது.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர்.

இவர்களில் கொரோனா தனிமைப்படுத்தல் பிரதேசத்தில் இருந்து பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கொரோனா தனிமைப்படுத்தல் இல்லாத பிரதேசத்திலுள்ள ஆசிரியர்கள் இன ஒற்றுமையை பேனும் வகையில் நிவாரணப் பொருட்களை வழங்கி தமது முன்மாதிரியான செயற்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

அந்த வகையில் நிவாரண பொருட்களை காத்தான்குடி மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.எச்.பிர்தௌஸிடம் குறித்த ஆசிரியர்கள் கையளித்தனர்.

குறித்த நிவாரணப் பொருட்கள் பாடசாலையில் கடமையாற்றும் கொரோனா தனிமைப்படுத்தல் பிரதேசத்தில் இருந்த ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்குமாக 56 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.நிஹால் மற்றும் பகுதி தலைவர்கள் கலந்து கொண்டார்.

ஓட்டமாவடி தொடக்கம் அக்கரைப்பற்று வரையுள்ள பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் பிரதேசத்திற்கு வெளியில் இருந்து வரும் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் இணைந்து இந்த உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்து இன ஒற்றுமையை வெளிப்படுத்தியதாகவும், இவ் உதவியை வழங்கிய ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் கல்லூரியின் அதிபர் எஸ்.எச்.பிர்தௌஸ் தெரிவித்தார்.

# இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது வேலைத்திட்டம்











பெருந்தோட்டங்களில் வாழும் மக்களின் சமூகப் பொருளாதாரமேம்பாட்டைப் பிரதானநோக்கமாகக் கொண்ட இரத்தினபுரிஉதவும் கரங்கள் அமைப்பின் 2021ஆம் ஆண்டுக்கான பல்வேறுமக்கள் நலத்திட்டங்கள் கடந்த 24ம் திகதிஞாயிற்றுக்கிழமைநிருவாகக் குழுவினர் தலைமையில் அங்கத்தவர்கள் பயனாளிகள் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றலுடன் ஆரம்பித்துவைக்கப்பட்டதுடன் நிறைவுசெய்யப்பட்டவைமக்கள்பயன்பாட்டிற்குவழங்கப்பட்டன. அவைபின்வருமாறு;

கஹவத்தபுங்கிரியபிரதேசத்தில் மிகவும் வறியநிலையிலுள்ளகுடும்பங்களுக்கான இரண்டுமலசலகூடங்கள் நிர்மாணிக்கப்பட்டுபயன்பாட்டிற்குகையளிக்கப்பட்டன.

இரண்டுஅறநெறிப் பாடசாலைகள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கானகற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இரத்தினபுரிஇமாட்டுவாகலதோட்டத்திலிருந்துபல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டமிகவும் வறியகுடும்பத்தைச் சேர்ந்தமாணவிஒருவருக்குஉயர் கல்வியைத் தொடரஉதவும் முகமாக 10, 000 ரூபா. நிதியும்வழங்கப்பட்டது.

இரத்தினபுரிஇஹப்புகஸ்தென்னபிரதேசத்தைச் சேர்ந்தபல்வேறுதோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த300 குடும்பங்களுக்கானபயன்தரும் மரக்கன்றுகளும் பயிரினவிதைகளும் வீட்டுத் தோட்டச் செய்கையையும் விவசாயத்தையும் ஊக்குவிக்கும் முகமாக இலவசமாகவிநியோகிக்கப்பட்டன.

பெருந்தோட்ட இளைஞர்களின் விளையாட்டுத் திறனை வளர்க்கும் முகமாககழகங்களுக்கிடையிலானஅணிக்கு பதினொருபேர் கொண்டசிநேகபூர்வமென்பந்துகிரிக்கற் சுற்றுப்போட்டிகள் இடம்பெற்றன. எட்டுஅணிகளுக்கிடையேஇடம் பெற்ற இப்போட்டிகளில் இறுதிச் சுற்றில் ஹப்புகஸ்தென்ன, லவன் ஸ்டார் அணியினர் வெற்றிபெற்றுகிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

ஹப்புகஸ்தென்ன, பெருந்தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டஅறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த 300மாணவர்களுக்கானசீருடைகளும் இலவசமாகவழங்கப்பட்டன.

இறுதியாக இரத்தினபுரி, ஹப்புகஸ்தென்னகல்லெல்ல,கலைமகள் தமிழ் வித்தியாலயஅதிபர் திருமதி. என். ஜீவரட்ணம் அவர்களுக்கானசேவைநலன் பாராட்டுதலும் இடம்பெற்றது.

# ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் கனிஷ்ட வித்தியாலயத்தில் 'எமக்காக நாம் அமைப்பால்' துவிச்சக்கரவண்டி வழங்கிவைப்பு



கடந்த 2020 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரட்டை சகோதரர்களான ரஞ்சன் தேஸ்னா, ரஞ்சன் திருக்கேஷ் ஆகிய இருவருக்கும் துவிச்சக்கரவண்டி ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் கனிஷ்ட வித்தியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது .

இந் நிகழ்வில் கால்நடை வைத்தியர் திரு.சி.துஷ்யந்தன் , எமக்காக நாம் அமைப்பின் தலைவர், சமூக சேவையாளர் திரு.லோகிதராஜா தீபாகரன், மட்/குடியிருப்பு கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. கிருபைராஜா , சரியை தொண்டர்கள் அமைப்பின் தலைவர் நமச்சிவாயம் திவாகர் அவர்களும் கலந்து கொண்டனர் .

எமக்காக நாம் அமைப்பின் கற்றலை ஊக்கப்படுத்தும் திட்டத்தில் எமக்காக நாம் அமைப்பினரிடம் சரியை தொண்டர்கள் அமைப்பு கேட்டுக்கொண்டதுக்கு அமைய கால்நடை வைத்தியர் திரு. சி.துஷ்யந்தன் மற்றும் லோ. தீபாகரன் அவர்கள் இவ் உதவியினை வழங்கி வைத்தனர்.

# மாவட்ட செயலகத்தின் தைப்பொங்கல் விழா



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழாவானது மிகவும் எளிமையான முறையில் கொரோன தொற்றுக்காரணமாக சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்துக்கொண்டு மாவட்ட செயலக ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு ஜெகதீசக்குருக்களினால் அபிசேகஆராதனைகளுடன் நடைபெற்றது.

இன்றைய பூசை நிகழ்வுகளில் மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் மாவட்ட செயலகத்தின் பொறியலாளர் ரி.சுமன் கிழக்குமாகாண பிரதிகாணி பதிவாளர் நாயகம் கந்தசாமி திருவருள் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# சோளன் செய்கையில் மிக வேகமாக பரவி வரும் இனந்தெரியாத வைரஸ் தாக்கம்



(பாறுக் ஷிஹான்)



ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய விவசாய உற்பத்தி திட்டத்தின்கீழ் அம்பாறை மாவட்டத்தில் பயிரிடப்பட்ட சோளன் அறுவடை சில இடங்களில் நடைபெற்ற போதிலும் சில பகுதிகளில் மிக வேகமாக பரவி வரும் இனந்தெரியாத வைரஸ் தாக்கத்தால் தற்போது ஏக்கர் சோளச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நோய்த் தாக்கத்தால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ள சில விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக கல்முனை, நீலாவணை, பாண்டிருப்பு,நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று , திருக்கோவில் ,சம்மாந்துறை, காரைதீவு, மாவடிப்பள்ளி போன்ற பிரதேசங்களில் வீட்டுத்தொட்ட பயிர் செய்கையாகவும் இச்சோளச் செய்கை செய்கை செய்யப்பட்டிருந்தது.

இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ள சோளன் பயிர்களில் சுமார் 100க்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் படைப்புழு தாக்கத்தின் பரவல் காணப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த விவசாய திணைக்களத்தின் உதவியுடன் நடவடிக்கை பல்வேறு பகுதிகளிலும் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது இச்செய்கையில் இனந்தெரியாத வைரஸ் தாக்கங்கள் அதிகரித்துள்ளதுடன் சோளத்தாவரத்தின் இலைகளிலும் பூக்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளன.மேலும் சில பகுதிகளில் சோளச்செய்கையில் எவ்வாறான நோய் பீடிக்கப்பட்டுள்ளது என்பதை இன்னும் அடையாளம் காணப்படாமலும் உள்ளது.

அத்துடன் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் வழிகாட்டுதலில் புதிய அரசாங்கத்தின் உள்நாட்டு உணவு உற்பத்தி கொள்கைத் திட்டத்திற்கமைவாக நாடுபூராகவும் ஒரு இலட்சத்தி 80 ஆயிரம் மெற்றிக்தொன் சோளன் உற்பத்தியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் எம்மை ஊக்குவித்தவர்கள் தற்போது எம்மை கைவிட்டுள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.அந்த வகையில் எமது மாவட்டத்தின் பல பிரதேச செயலாளர் பிரிவில் இம்முறை செய்கை செய்யப்பட்டுள்ள சோளன் பயிர்களில் பெரும்பாலான சோளன் படைப்புழுத் தாக்கத்தின் பரவல் காரணமாக முற்றுமுழுதாக அழிவடைந்த நிலையில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பல பிரதேசங்களின் தற்போது சோளம் செய்கை பண்ணப்பட்டு வந்த நிலையில் சோளம் குடலைப்பருவமாக வரும் போதே படைப்புழுக்களின் தாக்கம் ஆரம்பித்து காணப்படுகின்றது. குறித்த பிரதேச மக்களின் ஜீவனோபாய தொழிலில் ஒன்றாக விவசாய செய்கை முக்கிய பங்கு வகிக்கின்றது. அதிலும் சோளம் செய்கை மூலம் இவர்கள் தங்களது வாழ்நாள் உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவியாக உள்ளது.

அத்தோடு சோளம் குலைகள் சிலவற்றினை படைப்புழுக்கள் அழித்து வெறும் சோளம் நெட்டிகள் மாத்திரம் சில சோளம் செய்கை தோட்டங்களில் காணப்படுகின்றது. இந்த வியடம் தொடர்பாக எந்தவித அதிகாரிகளும் வருகை தரவில்லை என் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் முதல் ஆரம்பித்த படைப்புழுக்களின் தாக்கம் தொடர்ச்சியாக இம்முறையும் ஏற்பட்டுள்ளது. கடந்த முறை அனுபவித்த நஷ்டத்தினை இம்முறை பூர்த்தி செய்யலாம் என்ற எண்ணத்தில் மக்கள் சோளம் செய்கையில் ஈடுபட்ட நிலையில் மீண்டும் படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே தொடர்ச்சியாக படைப்புழுக்களின் தாக்கம் ஏற்பட்டு வரும் பட்சத்தில் பாதிக்கப்படும் எங்களுக்கு உரிய நஷ்ட இட்டினை வழங்குமாறு கோருவதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களது பகுதிகளுக்கு இதுவரையும் வருகை தரவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் , உதவி விவசாய பணிப்பாளர்கள் ,பாடவிதான உத்தியோகத்தர்கள் ,விவசாய போதனாசிரியர்கள், தொழினுட்ப உத்தியோகத்தர்களுக்கு இந்நோய்த்தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் விதம் தொடர்பாகவும் விவசாயிகளுக்கு விழப்பூட்டல் செய்து கட்டுப்பாட்டு செயன் முறைகளைக் கற்றுக் கொடுக்கும் பயிற்சிகளும் வழங்கி இருந்தனர்.

இது தொடர்பாக விவசாயிகளுக்கான அறிவூட்டல்கள் வழங்கல் , செயன்முறைப் பயிற்சி வழங்கல் ,களவிஜயங்கல் , துண்டுப்பிரசுரங்கள் வழங்குதல் ,ஒலிபெருக்கி மூலம் அறிவூட்டல், போன்ற நடவடிக்கைகள் எமது உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இப்படைப்புளுத் தாக்கமானது இளம்பருவப் பயிர்களுக்கு அதிகமாக காணப்படுவதுடன் முதிர்பருவ பயிர்களுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்





( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் 1986 மற்றும் 1989 ம் ஆண்டுகளில் கல்வி பொது தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 வது யூபிலி விழாவை முன்னிட்டு மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குறிப்பிட்ட முக்கிய சில பாடசாலைகளில் மிகவும் வறுமை கோட்டுக்கு கீழ் பெற்றோரை இழந்து வசிக்கும் குடும்பங்களிலிருந்து கல்வி கற்கும் மாணவர்களை தெரிவு செய்து 250 மாணவர்களுக்கு தலா 2500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் வெள்ளிக் கிழமை முதல் கட்டமாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் 25 மாணவர்களுக்கு இவ் பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் (டிலாசால் சபை) தலைமையில் இடம்பெற்றது.

# கொட்டகலையில் மோட்டார் சைக்கிள் விபத்து

(க.கிஷாந்தன்)



திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை நகரில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த மூவர் சிகிச்சைகளுக்காக கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டகலை நகரில் இருந்து பத்தனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கில் கொட்டகலை வூட்டன் பசாரில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளில் மோதியதன் பின்னர் இழுத்து செல்லப்பட்டு பாதை ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேனில் மோதியுள்ளது.

இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி எறியப்பட்டதுடன் மற்றய மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் என மூவர் படுங்காயமடைந்துள்ளதுடன் குறித்த மோட்டார் சைக்கில் மற்றய மோட்டார் சைக்கிள் வேன் என்பன சேதமடைந்துள்ளது.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவரால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமையே இந்த விபத்துக்கான காரணமாக இருக்கலாம் என பத்தனை போலீசார் தெரிவித்தனர்.

மேலும் மோட்டார் சைக்கில் சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டு வேனில் மோதி அதன் அடியில் சென்றுள்ளதால் வேனுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

# இளம் தாயொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை



(க.கிஷாந்தன்)

அட்டன், கினிகத்தேன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பகமுவ - மாபத்தன பகுதியில் இளம் தாயொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான மாலிகா பிரியதர்ஷினி என்பவரே, அவரின் கணவரால் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணுக்கு மற்றுமொரு நபருடன் கள்ளத்தொடர்பு இருந்ததை அடிப்படையாக வைத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி மாலையே இக்கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் மறுநாள் 27 ஆம் திகதி மாலை குறித்த பெண்ணின் கணவர், தாமாகவே முன்வந்து கினிகத்தேனை பொலிஸில் சரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், ஸ்தல விசாரணையை மேற்கொண்டனர்.

நீதவான் பரிசோதனையின் பின்னர் சடலம் நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு எடுத்துசெல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸாரும், மற்றும் அட்டன் கைரேகை பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புது யுகத்திற்குள் கல்முனை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு டிஜிட்டல் கணணிமயம்





( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு டிஜிட்டல் கணணி மயப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அங்குரார்ப்பண வைபவம் நேற்று சுகாதாரமுறைப்படி நடைபெற்றது.

நடைபெற்றுவரும் புதிய செயற்பாடுகளில் ஒன்றாக வைத்தியட்சகர் இரா.முரளீஸ்வரனின் தலைமைத்துவத்தின் கீழ் பிரதி வைத்தியட்சகரும் சுகாதார கல்விப்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டொக்டர். சோமசூரியம் திருமாலின் நெறிப்படுத்தலில் வெளிநோயாளர் பிரிவின் சிகிச்சைகள் மற்றும் நோயாளர்கள் தொடர்பான விபரங்கள் புதிய தகவல் தொழில்நுட்பத்தின் கீழ் ஆவணப்படுத்தப்படுகின்றது..

இத்திட்டம் சுகாதார திணைக்களத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் நாயகம் டொக்டர் எஸ். சிறிதரனின் உதவியுடன் டொக்டர். அணில் சமரநாயக்க ( தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் சுகாதார திணைக்களம்) ஒத்துழைப்புடன் இத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வைத்தியட்சகர் இரா.முரளீஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வைத்தியசாலை ஊழியர்கள் நேரடியாகவும் கொவிட் சூழ்நிலை காரணமாக சுகாதார திணைக்கள முக்கியஸ்த்தர்கள் ஜுழுழுஆ செயலி மூலமும் பங்குபற்றி உரையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வுக்கு டாக்டர். நடராசா ரமேஸ் ( சுற்றாடல் தொழில் சுகாதார வைத்திய அதிகாரி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை) கல்முனை ஆதார வைத்தியசாலை திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் ஜே.மதன் மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

கொரோனாதடுப்பு செயல்பாடுகளின் அடுத்த அங்கமாக வெளிநோயாளர் பிரிவு டிஜிட்டல் கணணிமயமாக்கல் நடவடிக்கைக்கு சுகாதார அமைச்சின் தகவல் தொழில்நுட்ப பிரிவு நிதி வழங்கி இன்று நடைமுறைப் படுத்தியுள்ளதுடன் இந்நிகழ்வின் ஆரம்ப விழாவினை சுகாதார அமைச்சின் உத்தியோக பூர்வ முகப் பக்கத்தில் இட்டு வைத்தியசாலையின் சேவையை கௌரவப் படுத்தியுள்ளனர். இதற்கு முன்னின்று உழைத்த டொக்டர் சோ. திருமால் அவருடைய குழுவினரிற்கு வைத்திய அத்தியட்சகர் பாராட்டை தெரிவித்ததுடன் இச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கிய வைத்திய சாலையின் அனைத்து பிரிவுகளுக்கும் நன்றிகளை தெரிவித்தார்.

இந் நிகழ்வை இதய நோய்ப்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எல். கமல்ராஜ் தொகுத்து வழங்கினார்.

சுபீட்சம் கிழக்குச் சூரியன்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

30 JANUARY 2021, SATURDAY

# பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழி நடத்திய ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பது வெறும் கண்துடைப்பபே

( சந்திரன் குமணன் )

பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழி நடத்திய ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பது வெறும் கண்துடைப்பாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர்தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நிந்தவூர் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் புலமை பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவியை கௌரவித்து பாடசாலை மாணவர்களுக்கான புத்தக பைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (29) வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் இடம்பெற்றது.

இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்;

ஜனாதிபதி ஆணைக்குழுவை தமிழ் மக்கள் ஏற்க முடியாத சூழல் இருக்கின்றது. ஏனென்றால் போரை முடிவுக்கு கொண்டு வந்து 12 ஆண்டுகள் ஆகியும் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வில்லை. அது மாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட ஏதாவது ஒன்றை அரசாங்கம் நிறைவேற்றி இருக்கின்றதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது.

அதனடிப்படையில் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமையப் பெறுகின்ற ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் எழப்போகும் நெருக்கடியிலிருந்து இலங்கை தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவால் பொறுத்தமட்டில் தமிழ் மக்களாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

ஏனென்றால் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளாக நியமித்து இருப்பவர்கள் கடந்தகால போர்களில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவர்கள் உயர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருப்பதும் இந்த நாட்டின் ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழி நடத்திய ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பது



வெறும் கண்துடைப்பாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர்.

எனவே போர்க்குற்ற விடயத்தில் சர்வதேச ரீதியாக முன்னெடுக்கும் விடயங்கள் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டும் உள்ளக ரீதியான பொறிமுறை என்கின்ற விடயத்தை நடைமுறைப்படுத்துவது தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் செயற்பாடுகளாகவே அமையும் .

பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரைக்கும் எந்த வரும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் அரசாங்கங்கள் எந்த ஒரு வசதியினை ஏற்படுத்திக் கொடுக்க வில்லை ஏனென்றால் அழிவுற்று பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கிராமங்களும் இன்னும் அழிவுற்றுக் கொண்டே இருக்கின்றது அவசர அவசரமாக கிழக்கு மாகாணத்தில் பல முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் அரசாங்கம் முன்னெடுத்து

**தவராசா கலையரசன்**

வருகின்றது இச் செயல்கள் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அழிவுகளையும் ஆபத்துக்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளாகவே அமைகின்றது.

சர்வதேச ரீதியாக ஐக்கிய நாடுகள் சபை ஊடாக இந்த நாட்டில் நிலையான சமத்துவம் சகல இனங்களும் சமமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் சார்பாகமக்கள் சார்பாக விடுக்கின்றேன் என தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் (Best of You-ng) சமூக அமைப்பினர், பாடசாலை ,அதிபர் ,பிரதி அதிபர், ஆசிரியர்கள் , ஊர் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் 2 ஆம் கட்டத்தின் கீழ் 12 பட்டதாரிகளுக்கு நியமனம்









(ஏ.எஸ்.எம்.முஜாஹித்)

பட்டதாரிகளை பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் இரண்டாம் கட்டத்தின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று (29) வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் 50 ஆயிரம் பட்டதாரிகளை பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டத்திற்கமைவாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 12 பட்டதாரிகளுக்கு சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கமைவாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.லதாகரன் , கணக்காளர் யூ.எல்.ஜவாஹிர், நிருவாக உத்தியோகத்தர் கே.யோகேஸ்வரன், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சிவம் , கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் மனோஜ் இந்திரஜித் , மேலதிக மாவட்ட பதிவாளர் பி.நித்தியானந்தன் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர் .

# "துளி அல்லது துகள்" நூல் அறிமுகம்



(பி.எம்.எம்.ஏ.காதர்)

அல்-மீஸான் பௌன்டேஷன் ஏற்பாட்டில் மருதமுனையைச் சேர்ந்த கவிஞரும்,சட்டத்தரணியுமான ஏ.எல்.எம்.றிபாஸ்(அலறி)எழுதிய கவிதைகளின் தொகுப்பான "துளி அல்லது துகள்"நூல் அறிமுகம் இன்று சனிக்கிழமை (காலை 9.30 மணிக்கு மருதமுனை கலாச்சார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழ சிரேஷ்ட விரிவரையாளர் ஏ.எம்.றியாஸ் (அம்ரிதா ஏயெம்) தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா கலந்து கொள்கின்றார்.

# வறிய மாணவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவிய முன்னாள் எம்.பி யோகேஸ்வரன்



(ந.குகதர்சன்)

சுவிஸ்லாந்து மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வாகனேரி கிராமத்தில் இயற்கை அனர்த்தம், கொரோனா போன்ற காரணங்களினால் தமது வாழ்வாதாரத்தினை இழந்த வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரனினால் வாகனேரி கிராமத்தில் இயற்கை அனர்த்தம், கொரோனா போன்ற காரணங்களினால் தமது வாழ்வாதாரத்தினை இழந்த வறிய குடும்பங்களுக்கும், வறிய மாணவர்கள் சிலருக்கும் உதவிகள் வழங்கும் வகையில் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் நிதி உதவி வழங்கப்பட்டது.

அந்த வகையில் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக ஒருவருக்கு தலா 1200 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், வறிய மாணவர்கள் சிலருக்கு பாடசாலை உபகரணங்களும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ. யோகேஸ்வரனால் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஒட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் த.கிருபைராசா, கிராம குளத்துமடு அபிவிருத்திச் சங்க தலைவர் இ.பார்த்தீபன், வாகனேரி அபிவிருத்திச் சங்க தலைவர் க.காசிநாதன் மற்றும் பேரவைப் பிரதிநிதிகளான சி.தயாபரன் பி.புஸ்பராஜா போன்றோர் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் வீடமைப்பு செயற்றிட்ட அங்குரார்ப்பண நிகழ்வு



(சர்ஜுன் லாபீர்)

சமுர்த்தி விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா ஒருவீடு என்ற அடிப்படையில் இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆறு இலட்சம்ரூபா ஒதுக்கீட்டிலும் சமுர்த்திப் பயனாளியின் நான்கு இலட்சம் ரூபா பங்களிப்பிலும் அமைக்கப்படவுள்ள பத்து இலட்சம் பெறுதியான வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் நேற்று கல்முனைப் பிரதேச செயலாளர்.எம்.எம்.நஸீரினால் பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக கணக்காளர் வை.ஹபிபுள்ளாஹ்,சமுர்த்தி சிரேஷ்ட தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ்,சிரேஷ்ட கருத்திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, மகாசங்க முகாமையாளர் எஸ். றிபாயா, வலய முகாமையாளர்எம்.எம்.முபீன்,

சிரேஷ்ட சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.நௌசாத் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளரினால் பழமரக் கன்றுகள் நடப்பட்டு மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.